

பத்திரிக்கைச் செய்தி வெளியீடு - 51

27.07.2026

லஞ்சம் கேட்டு பெற்ற சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் கைது

புகார்தாரர் திரு.மஞ்சுநாதன், ஆம்பூர், திருப்பத்தூர் மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் தன்னுடைய நான்கு சக்கர வாகனத்தால் விபத்தினை ஏற்படுத்தியுள்ளார். திரு.ராமகிருஷ்ணன், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், ஆலங்காயம், காவல் நிலையம், காவல் நிலையம் (பொறுப்பு) அவர்கள் புகார்தாரரின் நான்கு சக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஆய்வுக்கு அனுப்புவதற்கும் மற்றும் புகார்தாரரை சொந்த ஜாமீனில் விடுதலை செய்யவும் தனக்கு ரூ. 5,000/- லஞ்சம் கொடுக்க வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை திருப்பத்தூர் பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 27.07.2026, வழக்கு பதிவு செய்யப்பட்டு, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ராமகிருஷ்ணன், சிறப்ப காவல் உதவி ஆய்வாளர் லஞ்ச பணம் ரூ.5,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

PRESS RELEASE – 51
27.07.2026

SPECIAL SUB-INSPECTOR OF POLICE ARRESTED FOR DEMAND AND ACCEPTANCE OF BRIBE

The complainant Tr.Manjunathan residing at Ambur, Tirupathur District was involved in a road accident while driving his four wheeler. Tr.Ramakrishnan, Special Sub-Inspector of Police, Alangayam Police Station (in charge), demanded a bribe of Rs.5,000/- from the complainant for sending the complainant's four-wheeler to the Motor Vehicle Inspector for inspection and for releasing the complainant on station bail. Unwilling to give bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Tirupathur detachment and gave complaint. In this connection a case was registered and a trap was organized today (27.07.2026). During trap proceedings, Tr.Ramakrishnan, Special Sub-Inspector of Police, received the bribe amount of Rs.5,000/- from the complainant. The accused was arrested and remanded.